# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2385/03 - 2024 මැයි මස 20 වැනි සඳුදා - 2024.05.20

*2385/03 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்

**2023 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டம்**

*2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 15(11)ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட விதிகள்.*

**பி. நந்தலால் வீரசிங்க,**
ஆளும் சபையின் தலைவரும் ஆளுநரும்,
இலங்கை மத்திய வங்கி.

இலங்கை மத்திய வங்கி,
கொழும்பு,
*2024, மே 17.*

இலங்கை மத்திய வங்கியின் துணை ஆளுநர்களின் நியமனம் மற்றும் மூத்த துணை ஆளுநர் பதவிக்கான நியமனம் என்பன தொடர்பான விதிகள்

1. இவ்விதிகள் இலங்கை மத்திய வங்கியின் 2024ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க "இலங்கை மத்திய வங்கியின் துணை ஆளுநரின் நியமனம் மற்றும் மூத்த துணை ஆளுநர் பதவிக்கான நியமனம்" தொடர்பான விதிகள் என எடுத்துக்காட்டப்படுதல் வேண்டும்.


1A - G 41961 — 24 (2024/05)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

2. 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் (இதனகத்துப் பின்னர் "சட்டம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 15(11) ஆம் பிரிவின் ஏற்பாடுகளினது நியதிகளின் படி செயற்படுகின்ற, இலங்கை மத்திய வங்கியின் ஆளுகைச் சபை இலங்கை மத்திய வங்கியின் (இதனகத்துப்பின்னர் "மத்திய வங்கி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) உதவி ஆளுநர்களின் நியமனம் மற்றும் மூத்த துணை ஆளுநர் பதவிக்கான நியமனம் தொடர்பில் இத்தால் விதிகளை விடுக்கின்றது.

3. துணை ஆளுநர்களினதும், மூத்த துணை ஆளுநரினதும் அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் நிலைகளானது, இச்சட்டத்தின் பிரிவு 15(8)இன் நியதிகளின் படி தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

4. எவரேனும் துணை ஆளுநரின் ஏதேனும் பதவி வெற்றிடமாகும் போது ஆளுகைச் சபையின் ஒப்புதலுடன், துணை ஆளுநர் பதவிக்கான ஆர்வத்தினை வெளிப்படுத்துமாறு மத்திய வங்கியின் மனித வளத் திணைக்களத்தின் பணிப்பாளரினால் கோரப்படுதல் வேண்டும்.

5. ஆர்வத்தினை வெளிப்படுத்துமாறு கோருகின்ற சந்தர்ப்பத்தில், மத்திய வங்கியின் உதவி ஆளுநர் பணியிலுள்ள, மற்றும் இப்பதவியில் குறைந்தபட்சம் இரண்டு ஆண்டுகள் பணிக் காலத்தினைக் கொண்டுள்ள உதவி ஆளுநர்கள், துணை ஆளுநர் பதவிக்கு விண்ணப்பிக்க தகைமையுடையவர்களாவர்.

6. தெரிவு செய்யப்படுதலானது, ஆளுநரைத் தலைவராகக் கொண்ட ஆளுகைச் சபையின் ஆளுநர் சபைக்கு நியமிக்கப்பட்ட உறுப்பினர்களில் குறைந்தபட்சம் மூன்றிலிரண்டு பங்கினரையும் நேர்முகப் பரீட்சை நடத்தப்படும் நேரத்தில் நாணயக் கொள்கைச் சபையிலிருந்தான உறுப்பினரொருவரையும் (ஆளுகைச் சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவராக இல்லாதவர்) உள்ளடக்கியதொரு குழுவினால் நடாத்தப்படும் நேர்முகப்பரீட்சை ஒன்றின் மூலம் மேற்கொள்ளப்படும்.

7. பரீட்சார்த்தியானவர் பதவி மூப்பு, வேலையுடன் தொடர்பான அனுபவம் மற்றும் பதவி முன்னேற்றம் பற்றிய பதிவேடுகள், பதவிக்கான பொருத்தம் (தலைமைத்துவத் தரங்கள், தனிப்பட்ட மனச்சால்புகள் மற்றும் தொடர்பூட்டல் தேர்ச்சிகள்) மற்றும் பரீட்சார்த்தியின் வங்கி மற்றும் நாடு பற்றிய தொலைநோக்கு உள்ளிட்ட மதிப்பீட்டு பிரமாணங்களை அடிப்படையாகக் கொண்டு, நேர்முகப்பரீட்சைக் குழுவினால் மதிப்பீடு செய்யப்படுவார். மனித வளத் திணைக்களப் பணிப்பாளர் மேற்குறிப்பிட்ட மனச்சால்பு/மதிப்பீட்டுப் பிரமாணம் பற்றி உள்ளக சுற்றறிக்கையொன்றின் மூலம் பரீட்சார்த்திக்கு அறிவிப்பார்.

8. ஆளுகைச் சபை, துணை ஆளுநர் பதவிக்கு நியமிக்கப்படுவதற்கு மிகப் பொருத்தமான அலுவலர் தொடர்பான அதன் விதந்துரைப்பினை, விதந்துரைக்கப்பட்ட அலுவலர் தொடர்பான விபரங்களுடன் சேர்த்து நிதித் துறைக்குப் பொறுப்பான அமைச்சரிடம் வழங்குதல் வேண்டும்.

9. ஆளுகைச் சபை, மத்திய வங்கியின் மூத்த துணை ஆளுநர் பதவி வெற்றிடமாக மாறுவதற்கு குறைந்தபட்சம் ஏழு (7) வேலை நாட்களுக்கு முன்னதாக மூத்த துணை ஆளுநராக பதவி குறித்துரைப்பதற்காக மிக மூத்த துணை ஆளுநரின் பெயரை நிதித் துறைக்குப் பொறுப்பான அமைச்சருக்கு விதந்துரைத்தல் வேண்டும்.

10. மத்திய வங்கியின் மூத்த துணை ஆளுநரின் பதவி எதிர்பாராத விதமாக வெற்றிடமாக மாறும் சந்தர்ப்பத்தில், விதி 9 இல் குறிப்பீடு செய்யப்பட்டவாறான விதந்துரைப்புக்களை பதவி வெற்றிடமாக மாறும் திகதியிலிருந்து மூன்று (3) வேலைநாட்களுக்குள் செய்தல் வேண்டும்.

EOG 05-0148

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.